தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 02.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 5.00 லட்சம் வழங்கிய முன்னாள் மாணவர்கள்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 1978–81 ம் ஆண்டு , வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டப் படிப்பு முடித்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உள்ள பாரம்பரியமிக்க ' ஃபிரிமேன்' கூடத்தில் 30.07.21 அன்று பட்டம் பெற்று 41 ஆண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு ஒன்று கூடி விழாவாக கொண்டாடினர்.

இந்த விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான முனைவர் வெ . கீதாலட்சுமி முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார். விழாவில் பழைய மாணவர்கள் த ங்கள் கல்லூரிக்கால 'டேட்லர்' என்ற பத்திரிக்கையை தற்காலத்திற்கு தகுந்தவாறு மறு உருவாக்கம் செய்தனர்.

இந்த டேட்லர் ஒவ்வொரு பழைய மா ணவரின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக இருந்தது.இந்த 'டேட்லர்–2.0'வை துணைவேந்தர் அவர்கள் வெளியிட்டார். இத்தகு முயறசியை துணைவேந்தர் அவர்கள் பெரிதும் பாராட்டினார் மற்றும் இப்பழைய மாணவர்கள் தங்களுக்குள் திரட்டிய ரூபாய் 5.00 லட்சத்தை பல்கலைகழகத்தில் 'அறக்கட்டளை நிதியாக ' நிறுவுவதற்கு துணைவேந்தரிடம் அளித்தனர் . இந்த நிதியிலிருந்து வரும் வட்டித்தொகையைக் கொண்டு ஏழை மாணவர்களின் கல்விக்கு 'உதவித் தொகை' வழங்குவதற்காக இந்த நிதியை நிறுவுவதாக கூறினார்கள்.

விழாவில் சிறப்புரையாற்றிய துணேவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் நடவடிக்கைகள் குறித்தும் அதில் முன்னாள் மாணவர்களின் பங்கு பற்றியும் விரிவாக விளக் கினார்கள்.

பல்கலைக்கழகத்தின் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு ஆற்ற வேண்டிய தொண்டுகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள்.

இந்த விழாவில் 54 முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனர் . இந்தியா மட்டுமல்லாமல் அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து நாட்டிலிருந்தும் வந்து பங்கேற்றனர். இவர்கள் தாங்கள் படித்த கல்லூரியில் மறுபடியும் ஒருமுறை தங்கள் பழைய வாழ்க்கையை வாழ்ந்தும் , மற்றும் நினைவு கூர்ந்தும் களித்தனர். தாங்கள் படித்த கல்லூரிக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி பழைய நினைவுகளோடு விடை பெற்றுச் சென்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்